தினமணி

**விலை உயர்வின் விவாதங்கள்!**

சா. ஜெயப்பிரகாஷ்

First Published : 29 Nov 2011 03:58:33 AM IST

பேருந்துக் கட்டணம், மின் கட்டணம், பால் விலை உயர்வை முதல்வர் ஜெயலலிதா அறிவித்து, நீண்ட விளக்கத்தையும் அளித்திருக்கிறார். இதைத் தொடர்ந்து கடும் கண்டனங்களும் வந்திருக்கின்றன. இந்த நேரத்தில் சில விவாதங்களை எழுப்ப வேண்டியுள்ளது.

ஒரே ஆண்டிலேயே பல முறை உயர்ந்திருக்கிறது பெட்ரோல், டீசல் விலை உயர்வு. அதுவும் ரூபாய்களில். ஆனால், நீண்ட காலத்துக்குப் பிறகு, அரசுப் பேருந்துகளின் கட்டணத்தில் கிலோமீட்டருக்கு 14 காசுகளும், 22 காசுகளும் என காசுகளில் உயர்த்தப்பட்டதற்கு கடுமையான கண்டனங்கள் எழுவது வியப்பாய் இருக்கிறது.

பெட்ரோல், டீசல் விலை உயர்வுக்கான எதிர்ப்பு சடங்காக மாறிப் போனது எப்படி? தலையெழுத்தாய் யாரேனும் சிலர்தான் இதற்காகப் போராட வேண்டுமா என்ன? தனியார் பெட்ரோலிய நிறுவனங்கள் விலையைத் தாங்களாகவே நிர்ணயம் செய்கின்றன. அரசு நிறுவனங்கள் தங்கள் பங்கிற்கு சரிபாதியளவில் வரியை நிர்ணயம் செய்கின்றன. இந்தக் கொடுமைகளைக் கேட்க ஆளில்லை.

அரசுப் பொதுத் துறை தனது ஸ்திரத் தன்மையைப் பாதுகாக்க சில காசுகளை உயர்த்துவதற்குக் காரணம் அரசுப் பொதுத்துறை நிறுவனங்கள் குறிப்பாக, போக்குவரத்துக் கழகம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே.

திடீரென அதிகக் கட்டணத்தை உயர்த்தக் கூடாது, அடிக்கடி ஏற்றக் கூடாது என்றெல்லாம் கருத்து நிலவுகிறது. ஆனால், வேறுவழியில்லை ஏற்றித்தான் ஆக வேண்டும்.

மூடிவிடாமல், பொதுத் துறை நிறுவனத்தைப் பாதுகாக்க இதுவும் ஒன்று என்பதை மறந்துவிடக் கூடாது. அதேநேரத்தில்தான் வேறு சில கேள்விகளையும் எழுப்ப வேண்டும்.

தேவைக்கேற்ப பேருந்துகள் இருக்கின்றனவா? நேரத்துக்கு வருகிறதா? பராமரிப்புடன் இருக்கிறதா? பணியாளர்கள் பற்றாக்குறையில்லாமல், தூக்கக் கலக்கமில்லாமல் ஓட்டுகிறார்களா? என்பன போன்று.

விலைவாசி உயர்வு என்பது மொட்டையாக விவாதிக்கக் கூடியதல்ல. எல்லா தளங்களிலும் தங்களின் ஒப்பீட்டை விரிவுபடுத்தி விவாதிக்க வேண்டும் என்பதை அரசுத் துறையிலிருந்து, சேவை அமைப்புகளில் இருந்து, தனிநபர் வரை புரிந்துகொள்ள வேண்டும்.

மின் கட்டணத்தைப் பொருத்தவரை- அந்தத் துறை என்னவோ மற்ற அரசுத் துறைகளிலேயே உயர்ந்த துறையாக செயல்பட்டுக் கொண்டே இருக்கிறது.

30 முதல் 40 சதம் வரை பகிர்மான நஷ்டம் ஏற்படுவதாக பலரும் புகார் தெரிவிக்கின்றனர். இதற்கு அந்தத் துறையிலிருந்து எந்தப் பதிலும் வந்ததே இல்லை. மின் துறையிலுள்ள கணக்கீடுகள்- புள்ளிவிவரங்கள் எதுவும் இதுவரை வெளிப்படையாக வந்ததே இல்லை.

பல இடங்களில் நடைபெறும் கள்ளத்தனமான மின் திருட்டே மின் துறையை தொடர்ந்து பெருமளவில் சிதைத்து வருகிறது.

இதையெல்லாம் சரிசெய்ய முன்வராமல் கட்டணத்தை மட்டும் ஏற்றுவதில் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. ஒரு பக்கம் மக்களின் தலையில் மட்டுமே சுமையை ஏற்றுவதாக இருக்கும். எனவே, வெளிப்படையான துறையாக அதை மாற்றும் வரை மின் பற்றாக்குறையும், கட்டண உயர்வும் மர்மங்களாகவும், புலம்பல்களாகவுமே இருக்கும்.

அடுத்த ஒன்று பால் விலை. மாநிலத்தில் சரிபாதிக்கும் குறைவாகத்தான் ஆவின் நிறுவனத்தால் (அரசு நிறுவனம்) மக்களுக்கு பால் விநியோகம் செய்ய முடிகிறது. மீதமுள்ள தேவையை தனியார் நிறுவனங்கள்தான் ஈடுகட்டுகின்றன. ஆனால், தற்போது அரசால் உயர்த்தி அறிவிக்கப்பட்டுள்ள கட்டணத்தை, ஏற்கெனவே தனியார் பால் நிறுவனங்கள் மக்களிடம் வாங்கி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் ஏராளமான சலுகைகள் அளித்தும், காலம்காலமாக கறவை மாடுகள் இலவசமாகவும், மானியத்திலும் விநியோகம் செய்தும் அரசால் ஏன் மக்களின் தேவையை நிறைவு செய்ய முடியவில்லை?

இத்தனைக்கும் இந்த வேலைக்காக தனியாக ஓர் அமைச்சர், தனித் துறை, ஏராளமான இயக்குநர்கள், கூட்டுறவுப் பதிவாளர்கள், அலுவலர்கள், பணியாளர்கள், கட்டடங்கள் எல்லாமும். ஆனால், பால் உற்பத்தியாளர்கள் இன்னமும் கிராமங்களில் கஷ்டத்தில்தான் இருக்கிறார்கள்.

முடிவு ஒன்றுதான். சரியோ தவறோ, ஓர் உயர்வு வரும்போது அது சார்ந்த அனைத்தையும் விவாதித்துத்தான் ஆதரவையும், எதிர்ப்பையும் வெளிப்படுத்த வேண்டும்.

இந்த ஒரு நேரத்தில் மட்டுமாவது விவாதிக்காமல் விட்டால், பிறகு எப்போதுதான் இவற்றைப் புரிந்து கொள்வது?- புரியச் செய்வது?

**கோனோவீடர் கருவி பயன்பாடு: விவசாயிகளுக்குப் பயிற்சி**

First Published : 28 Nov 2011 11:41:03 AM IST

தருமபுரி, நவ. 27: திருந்திய நெல் சாகுபடி முறையில் கோனோவீடர் கருவியின் பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு நேரடி செயல்விளக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது.

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியத்துக்குள்பட்ட அதியமான்கோட்டை, வடக்கு கொட்டாவூரில் விவசாயி செந்தில்குமாரின் வயலில் இப் பயிற்சி வகுப்பு அண்மையில் நடைபெற்றது. கோனோவீடர் இயந்திரத்தை இயக்குவது குறித்து வேளாண்மை அலுவலர் ச. மணிராஜன் கூறியது: திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவுப் பணிகளை மேற்கொண்டுள்ள விவசாயிகள், கட்டாயம் கோனோவீடர் கருவி மூலம் களையெடுக்க வேண்டும். இந்த இயந்திரத்தைப் பயன்படுத்தி 4 நபர்களே களையை எடுக்கலாம்.

இல்லையெனில் குறைந்தது ஓர் ஏக்கருக்கு 25 நபர்களை பயன்படுத்த வேண்டியிருக்கும். கூடுதல் செலவாகும். மேலும், இக் கருவியைப் பயன்படுத்துவதால் வேர்கள் பிரிக்கப்பட்டு, கூடுதல் பயிர் வளரும். நடவு செய்த 10 நாளுக்குப் பிறகு 4 முறை ஒவ்வொரு 10 நாள் இடைவெளியில் இந்த இயந்திரத்தைப் பயன்படுத்த வேண்டும். சாதாரண முறையில் ஓர் ஏக்கருக்கு 2 டன் மகசூல் பெற்றால், இந்த புதிய தொழில்நுட்ப முறையில் 4 டன்னுக்கு மேல் மகசூல் கிடைக்கும் என்றார். விதைச் சான்று அலுவலர் எல். பழனிசாமி, வேளாண்மைத் துணை அலுவலர் ஆர். ராமநாதன் ஆகியோரும் செயல் விளக்கம் அளித்தனர். உதவி வேளாண்மை அலுவலர்கள் செல்வம், சதாசிவம் ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

## 3,150 ஹெக்டேர் நெல் பயிர்கள் தண்ணீரில் மூழ்கின

First Published : 28 Nov 2011 02:13:14 PM IST

திருச்சி, நவ. 27: திருச்சி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் ஏறத்தாழ 3,150 ஹெக்டேர் நெல் பயிர்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன.

திருச்சி மாவட்டத்தில் தொடர்ந்து நான்காவது நாளாக ஞாயிற்றுக்கிழமையும் பரவலாக மழை பெய்தது. இந்த மழையால் ஆறுகள், வாய்க்கால்களில் நீரோட்டம் அதிகரித்துள்ளது.

லால்குடி அருகேயுள்ள கூழையாறு, பங்குனியாற்றில் ஏற்பட்ட வெள்ளத்தால் தண்ணீர் எதிர் திசை நோக்கி வந்து வயல்களில் புகுந்தது. இதனால், நகர், பெரும்காவூர், சிறுமருதூர், மாடக்குடி, திருமங்கலம், சிறுத்தையூர், காட்டூர், கொப்பாவளி உள்ளிட்ட கிராமங்களில் ஏறத்தாழ 1,700 ஹெக்டேரில் பயிரிடப்பட்டுள்ள நெல் பயிர்கள் தண்ணீரில் மூழ்கின.

இதேபோல, உப்பிலியபுரம் வட்டாரத்தில் பாலகிருஷ்ணம்பட்டி, சங்கலாயகோம்பை, சிறுவயலூர், கோட்டப்பாளையம், ஆலத்துடையான்பட்டி, புளியஞ்சோலை உள்ளிட்ட கிராமங்களில் ஏறத்தாழ 500 ஹெக்டேரிலும், அந்தநல்லூர் வட்டாரத்தில் ஜீயபுரம், சிறுகமணி, குழுமணி உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 250 ஹெக்டேரிலும், மணிகண்டம் வட்டாரத்தில் சோமரசம்பேட்டை, அல்லித்துறை, வயலூர் உள்ளிட்ட கிராமங்களில் ஏறத்தாழ 200

ஹெக்டேரிலும், திருவெறும்பூர் வட்டாரத்தில் சுமார் 500 ஹெக்டேரிலும் பயிரிடப்பட்டுள்ள நெல் பயிர்கள் தண்ணீரில் மூழ்கின.

இதுதொடர்பாக மாவட்ட வேளாண் துறை இணை இயக்குநர் ஜெ. சேகர் தலைமையில், துணை இயக்குநர்கள் ஆர். சந்திரசேகரன், எஸ். சபா நடேசன், வட்டார உதவி இயக்குநர்கள் உள்ளிட்டோர் கணக்கெடுக்கும் பணியை ஞாயிற்றுக்கிழமை மேற்கொண்டனர்.

மழை தொடர்ந்து பெய்து வயல்களில் தேங்கியுள்ள தண்ணீர் வடியாவிட்டால், பயிர்கள் பாதிக்கக்கூடும் என வேளாண் துறை அலுவலர்கள் தெரிவித்தனர்.

திருவெறும்பூர்: திருவெறும்பூர் வட்டாரத்தில் பழங்கனாங்குடி செட்டிக்குளம் உடைந்ததாலும், துவாக்குடி பெரிய ஏரியில் தண்ணீர் வழிந்ததாலும், கூத்தைப்பார் அரசங்குடி சாலையில் உள்ள கிளி வாய்க்காலில் தண்ணீர் வழிந்ததாலும் அருகில் பயிரிடப்பட்டுள்ள சம்பா நெல் பயிர்கள் மூழ்கின. இதேபோல, வேங்கூர், நொச்சியவயல் புதூர், திருநெடுóங்குளம், ஆலத்தூர், கீழக் கல்கண்டார்கோட்டை, அரசங்குடி, பாப்பாக்குறிச்சி, எல்லக்குடி, அசூர், சோழமாதேவி உள்ளிட்ட பகுதிகளிலும் நெல் பயிர்கள் தண்ணீரில் மூழ்கின. இந்தப் பயிர்கள் அழுகும் நிலையில் உள்ளதால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

திருவெறும்பூர் வட்டாரத்தில் வேளாண்ம உதவி இயக்குநர் இரா. ரவி தலைமையில் வேளாண் அலுவலர்கள் தண்ணீரில் மூழ்கியுள்ள பயிர்கள் குறித்து கணக்கெடுத்தனர்.

மேலும், நவல்பட்டு அண்ணா நகர், காட்டூர் அண்ணா நகர், வி.எஸ். காலனி, பாலாஜி நகர், அஷ்டலட்சுமி நகர், முத்து நகர், மலைக்கோயில் கிரிவலப்பாதை ஆகிய பகுதிகளில் தண்ணீர் தேங்கியுள்ளது. இதனால், அந்தப் பகுதி மக்கள் மிகுந்த சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர்.

**நாகை மாவட்டத்தில் 16,142 ஹெக்டேரில் நெல் பயிர்களை மழை நீர் சூழ்ந்துள்ளது**

First Published : 28 Nov 2011 02:10:49 PM IST

நாகப்பட்டினம், நவ. 27: நாகை மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக பெய்த பலத்த மழையின் காரணமாக சுமார் 16,412 ஹெக்டேர் பரப்பில் சம்பா, தாளடி நெல் பயிர்கள் மழை நீரால் சூழப்பட்டுள்ளதாக வேளாண் துறையினர் தெரிவித்துள்ளனர்.

நாகை மாவட்டத்தில் மழை காரணமாக இதுவரை 4 பேர் இறந்துள்ளனர். இதற்கான நிவாரணமாக, தலா ரூ. 2 லட்சம் வீதம் ரூ. 8 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

நவ. 24-ம் தேதி வேதாரண்யம் பகுதியில் வீசிய சூறைக்காற்றில் 63 வீடுகள் சேதமடைந்தன. மாவட்டத்தில் நவ. 27-ம் தேதி வரை 116 வீடுகள் சேதமடைந்துள்ளன. இவற்றுக்கான நிவாரணமாக இதுவரை ரூ. 3.32 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் நிகழாண்டில் 93,500 ஹெக்டேரில் சம்பா நெல் பயிரும், 26,800 ஹெக்டேரில் தாளடி நெல் பயிரும் சாகுபடி செய்யப்பட்டது. தொடர் மழையின் காரணமாக, நவ. 26-ம் தேதி

வரை 1,337 ஹெக்டேர் சம்பா மற்றும் தாளடி நெல் பயிர்கள் முழுமையாக மழை நீரால் சூழப்பட்டிருந்ததாகவும், 14,805 ஹெக்டேர் நெல் பயிர்கள் பகுதியளவு மழை நீரால் சூழப்பட்டிருந்ததாகவும் வேளாண் துறை கணக்கெடுப்பில் கூறப்பட்டுள்ளது.

சனிக்கிழமை முதல் மழை சீற்றம் குறைந்திருப்பதால், வயல்களில் தேங்கியுள்ள மழை நீர் வடிந்து வருவதாகவும் வேளாண் அலுவலர்கள் தெரிவித்தனர்.

மழை காரணமாக இதுவரை 41 கால்நடைகள் இறந்துள்ளன. இவற்றுக்கான நிவாரணமாக ரூ. 2.26 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

513 கி.மீ சாலைகள் பாதிப்பு; நாகை மாவட்டத்தில் நெடுஞ்சாலைத் துறை, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிக்குள்பட்ட சாலைகளில் இதுவரை சுமார் 513 கி.மீ. சாலைகள் சேதமடைந்துள்ளதாக மாவட்ட நிர்வாகத்தின் கணக்கெடுப்பில் கூறப்பட்டுள்ளது. மழையால் சேதமடைந்த சாலைகளை தாற்காலிகமாக சீரமைக்க ரூ. 8.25 கோடியும், நிரந்தரமாக சீரமைக்க ரூ. 100.98 கோடியும் நிதி கோரப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைத் துறை மற்றும் நகராட்சிகளில் 37 சிறு பாலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தப் பாலங்களை தாற்காலிகமாக புனரமைக்க ரூ. 2 லட்சமும், நிரந்தரமாக சீரமைக்க ரூ. 1.13 கோடியும் நிதி கோரப்பட்டுள்ளதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சராசரி மழையளவு: நாகை மாவட்டத்தில் கடந்த 2008-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் 797.47 மில்லி மீட்டர் மழை பதிவானது. 2009-ல் 698.5 மில்லி மீட்டரும், 2010-ம் ஆண்டில் 540.6 மில்லி மீட்டரும், நிகழாண்டில் நவ. 27-ம் தேதி வரை 402.73 மில்லி மீட்டர் மழையும் பதிவானதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கடந்த 3 ஆண்டுகளைவிட நிகழாண்டில் குறைவான அளவிலேயே மழை பதிவாகியுள்ளது. இருப்பினும், நவம்பர் மாத சராசரி மழையளவு 337.6 மி.மீட்டர் என்ற அளவீட்டைவிட தற்போது பெய்துள்ள மழையளவு அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏரிகளின் நீர்மட்டம்: நாகை மாவட்டத்தில் திருவாலி, பெருந்தோட்டம் ஆகிய இரண்டு ஏரிகள் உள்ளன. இவற்றில் திருவாலி அதிகபட்ச நீர்மட்டம் 2 மீட்டர், ஞாயிற்றுக்கிழமை மாலை இந்த ஏரியின் நீர்மட்டம் 1. 9 மீட்டர். பெருந்தோட்டம் ஏரியின் அதிகபட்சம் நீர்மட்டம், 2.4 மீட்டர் ஞாயிற்றுக்கிழமை மாலை இந்த ஏரியின் நீர்மட்டம் 2.2. மீட்டராக இருந்தது.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**கடன் பெறாத விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டு திட்டம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 29,2011,00:19 IST

கருத்தை பதிவு செய்ய

கடலூர் : கடன் பெறாத விவசாயிகளுக்கும் பயிர் காப்பீட்டு திட்டத்தில் சேர்ந்து பயன் பெறவேண்டும் என மத்திய கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் தெரிவித்துள்ளார். இது குறித்து கடலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: கடலூர் மாவட்டத்தில் சம்பா - தாளடி - பீசானம் நெல் 2ம் பயிருக்கு மாற்றி அமைக்கப்பட்ட புதிய பயிர் காப்புறுதித் திட்டத்தை வருவாய் கிராம அளவில் நடப்பு ஆண்டுக்கு செயல்படுத்தப்பட்டு, அதற்கான பயிர் காப்பீடு பிரிமியம் செலுத்தும் காலக்கெடு கடந்த 15ம் தேதி என அறிவிக்கப்பட்டது. தற்போது இதனை நீட்டித்து வரும் 30ம் தேதி வரை பயிர் காப்பீட்டு பிரிமியம் செலுத்தலாம் என தேசிய வேளாண்மை பயிர் காப்பீட்டு நிறுவனத்தால் தெரிவிக்கப்பட்டுள் ளது. எனவே இந்த கால நீட்டிப்பினை பயன்படுத்தி கடன் பெறாத விவசாயிகள் தொடக்க வேளா ண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் நெல் 2ம் பயிருக்கு காப்புறுதி செய்து அதற்குரிய பிரிமிய தொகையை செலுத்த லாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**கோமாரி நோய் தாக்கத்தால் மாடுகள் பாதிப்பு :மருத்துவக்குழு தீவிர சிகிச்சை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 29,2011,03:39 IST

ப.வேலூர்: ப.வேலூர் அதன் சுற்றுவட்டார கிராமப்புறங்களில் உள்ள மாடுகள், கோமாரி நோய் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. அந்நோய் தாக்கம் உள்ள கிராமங்களுக்கு, அரசு கால்நடை மருந்தகங்களைச் சேர்ந்த டாக்டர் குழுவினர் நேரடியாக சென்று தடுப்பூசி போடுதல் உள்ளிட்ட நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

நாமக்கல் மாவட்டம், ப.வேலூர் சுற்றுவட்டார கிராமங்களான, பரமத்தி, ப.வேலூர், சோழசிராமணி, ஜேடர்பாளையம், கபிலர்மலை, மோகனூர், குப்புச்சிப்பாளையம் உள்ளிட்ட பகுதியில், விவசாயம் பிரதான தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விவசாயத்தின் உப தொழிலாக கால்நடை வளர்ப்பும் மேற்கொள்ளப்படுகிறது. அவற்றின் மூலம் விவசாயிகள் கணிசமான அளவு லாபமும் ஈட்டி வருகின்றனர். தற்போது, மேற்குறிப்பிட்ட பகுதியில் உள்ள

கறவை மாடு, காளை மாடு என அனைத்தும் கோமாரி நோய் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. அந்நோய் தாக்கப்படட மாடுகளின் குழம்பில், தொற்றுக் கிருமி காரணமாக புண் ஏற்பட்டுள்ளது. அதுபோல், மாடுகளின் வாயிலும் புண் ஏற்படுவதுடன், எச்சிலும் வடிந்து கொண்டே உள்ளது. நோய் தாக்கப்பட்ட மாடுகள் உணவு எதுவும் சாப்பிடாமல் படுத்த படுக்கையான நிலையில் உள்ளது. அதுபோல், ஆடுகள் கழிச்சல் நோயால் பாதிக்கப்பட்டுள்ளன. இது, ப.வேலூர் சுற்றுவட்டார கால்நடை வளர்ப்போர் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளது. நோய் தாக்கம் குறித்து தகவல் அறிந்த, ப.வேலூர் அரசு கால்நடை மருத்துவக் குழுவினர், கோமாரி நோய் தாக்கிய மாடுகள், கழிச்சல் நோயால் பாதிக்கப்பட்ட ஆடுகளுக்கும், நேரடியாக கிராமங்களுக்கு சென்று சிகிச்சை அளித்து வருகின்றனர். இதுகுறித்து மருத்துவக் குழுவினர் கூறியதாவது: தற்போது பெய்து வரும் தொடர் மழையால், செடிகளின் மீது நோய் தொற்று கிருமிகள் காணப்படும். அவற்றை மாடுகள் உட்கொள்ளும்போது, நடந்து செல்லும்போது கோமாரி நோய் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. நோய் தாக்கப்பட்ட மாடுகளின் வாயில் எச்சில் வடிந்து கொண்டிருக்கும். வாய், குழம்புகளில் நோய் தொற்று காரணமாக புண் காணப்படும். அதனால், மாடுகள் நடந்து செல்லாமல் ஒரே இடத்தில் படுத்த படுக்கையாக இருக்கும். தீவனமும் உட்கொள்ளாது. இது கோமாரி நோய்க்கான அறிகுறி. நோய் பாதிக்கப்பட்ட மாடுகளுக்கு விரைந்து சிகிச்சை அளிக்க வேண்டும். இல்லையெனில், அவை உணவு உட்கொள்ளாமல் இறக்கவும் நேரிடும். மஞ்சள் தேய்தல் போன்றவற்றை கால்நடை வளர்ப்போர் மேற்கொள்ளக்கூடாது. கால்நடை மருந்தகத்தில் போடப்படும் ஊசி மூலம், நோய் பாதிக்கப்பட்ட மாடுகள் எளிதில் குணமடையும். மாடுகள் கட்டப்படும் இடம் உள்ளிட்டவற்றை கால்நடை வளர்ப்போர் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். இந்நோய், ஜேடர்பாளையம் பகுதியில் உள்ள மாடுகளுக்கு இருப்பது முதலில் கண்டறியப்பட்டது. அங்கு உடனடியாக சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. அதுபோல், சோழசிராமணி, கபிலர்மலை, மோகனூர் பகுதியில் உள்ள மாடுகளுக்கும் கோமாரி நோய் தாக்கம் இருப்பது தெரியவந்துள்ளதால், அக்கிராமங்களுக்கு நேரடியாக சென்று சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஆடுகளும் கழிச்சல் நோயால் பாதிக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கும் கால்நடை மருந்தகம் மூலம், தடுப்பூசிகள் போடப்படுகின்றன. அவற்றை விவசாயிகள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு கூறினர்.

**விவசாய சங்க பிரதிநிதிகள் ஆலோசனைக் கூட்டம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 29,2011,00:19 IST

சிதம்பரம் : சிதம்பரத்தில் அனைத்து விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு பாசன சங்கத் தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். விவசாய சங்க மாவட்டச் செயலர் சேகர், இளங்கீரன், வினாயகமூர்த்தி, ஜெயராமன்,

கற்பனை செல்வம், ஜின்னா, ஜாகிர் உசேன், இளம்பாரதி, ரவீந்திரன், ரவிச்சந்திரன், ஜீவா, கண்ணன் உட்பட பலர் பங்கேற்றனர். நெல் குவிண்டாலுக்கு 2,000 ரூபாய். கரும்பு டன்னுக்கு 3,000 ரூபாய் வழங்க வேண்டும். உர விலை ஏற்றத்தை வாபஸ் பெற வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் குறித்து பேசப்பட்டது. இது குறித்து டிசம்பர் 2ம் தேதி சிதம்பரம் தலைமை தபால் நிலையம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

**தர்மபுரி அணைகளில் நீர்மட்டம் உயர்வு :தொடர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 29,2011,04:59 IST

கருத்தை பதிவு செய்ய

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்த மழையை தொடர்ந்து அணைகளில் நீர் மட்டம் கிடுகிடுவென உயர்ந்துள்ளது. ஏரி மற்றும் நீர் ஆதாரங்களில் நீர் மட்டம் உயர்ந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். வங்க கடலில் ஏற்பட்ட குறைந்தழுத்தம் காரணமாக தர்மபுரி மாவட்டத்தில் கடந்த நான்கு நாளாக பரவலாக மழை பெய்தது. நேற்று காலையில் இருந்து மழை குறைந்தது. லேசான சாரல் மழை பெய்த போதும், கடந்த நான்கு நாட்கள் பெய்த மழை இல்லை. தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக மாவட்டத்தில் உள்ள ஏரி, குளங்கள், அணைகளில் நீர் மட்டம் கிடுகிடுவென உயர்ந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கடந்த நான்கு நாட்கள் பெய்த மழையால் தர்மபுரி நகரில் மிகவும் தாழ்வான பகுதியான பி.டி.ஓ., ஆஃபீஸ் குடியிருப்பு, பாரதி நகர், குமாரசாமி பேட்டை உள்ளிட்ட பகுதியில் தாழ்வான பகுதியில் மழை நீர் தேங்கியது. பென்னாகரம் சாலையில் உள்ள இ.பி., காலனிக்கு செல்லும் வழியில் உள்ள பாலம் சீரமைக்கும் பணிகள் நடப்பதால், இந்த சாலைகளில் மழை நீர் தேங்கி ஏரிக்கு செல்ல வழியில்லாமல், குடியிருப்பு காலி மனைகளில் தண்ணீர் தேங்கியது. இதனால், இன்று காலை அந்த வழியாக பள்ளிக்கு செல்லும் மாணவ, மாணவிகள், இரு சக்கர வாகனங்களில் செல்வோர் பெரும் அவதிக்குள்ளாகினர். நேற்று காலை மழை குறைந்திருந்ததால், நீர் சூழ்ந்த பகுதியில் இருந்து மெல்ல, மெல்ல நீர் வெளியேற்றும் பணிகள் நடந்தது. வயல் வெளிகளில் தேங்கியை நீரை விவசாயிகள் கால்வாயிகளில் திறந்து விட்டு, வயல் வெளி பகுதியை நீர் இன்றி மாற்றும் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டனர். நேற்று முன்தினம் இரவு மாவட்டத்தின் பரவலாக மழை பெய்திருந்தது. அதிகபட்சமாக மாரண்டஹள்யில், 42.60 மி.மீ., மழை பதிவானது. அரூரில், 4.40 மி.மீ.,, பாப்பிரெட்டிப்பட்டியில், 4.10, பாலக்கோட்டில் 3, பென்னாகரம் 6, ஒகேனக்கல் 15.10 மாவட்டம் முழுவதும், 42.60 மி.மீட்டர் பதிவானது. தர்மபுரியில் மழை இல்லை. தொடர்ந்து பெய்த மழையை தொடர்ந்து வாணியாறு அணையின் மொத்த கொள்ளவான, 65.27 அடியில், 64.29 அடி நீர் நிரம்பி உபரி நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

சின்னாறு அணையில் மொத்த கொள்ளவு 50 அடியில் 42.64 அடி நீர் உயர்ந்துள்ளது. தொப்பையாறு அணையின் மொத்த கொள்ளவு, 50.18 அடியில், 39.34 அடியும், நாகாவதி அணையின் மொத்தம், 24.60 கொள்ளவில், 20.57 அடி நீர் நிரம்பியுள்ளது. கேசர்குளி அணையில் மொத்தம் கொள்ளவு, 25.20 அடியில், 15 அடி நீர் நிரம்பியுள்ளது. வரட்டாறு அணையில் மொத்தம், 34.45 அடியில், 34.45 அடியும் நீர் நிரம்பியுள்ளது.

தொடர் மழை காரணமாக மாவட்டத்தில் உள்ள அணைகளில் நீர் மட்டம் தொடர்ந்து உயர்வடைந்துள்ளதால், பாசன பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தொடர்ந்து வரும் நாட்களில் பெய்யும் வட கிழக்கு பருவமழையால் நீர் ஆதாரங்களில், 100 சதவீதம் நீர் நிரம்ப வாய்ப்புள்ளதால், இந்தாண்டு விவசாய பணிகள் சிறப்பாக இருக்கும் என விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**"உர விலையை குறைக்க வேண்டும்' தமிழக விவசாயிகள் சங்கம் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 29,2011,04:24 IST

பெரம்பலூர்: "உர விலையை குறைக்க மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்' என தமிழக விவசாயிகள் சங்க கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தமிழக விவசாயிகள் சங்கத்தின் பெரம்பலூர், அரியலூர் மாவட்ட செயற்குழு கூட்டம் பெரம்பலூரில் சங்கத்தின் மாநில செயலாளர் ராஜாசிதம்பரம் தலைமையில் நடந்தது. கூட்டத்துக்கு பெரம்பலூர் மாவட்ட தலைவர் மாணிக்கம், அரியலூர் மாவட்ட தலைவர் அன்பழகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலாளர் நீலகண்டன், பொருளாளர் மணி, மாவட்ட இளைஞரணி செயலாளர் செல்வதுரை ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி பேசினர். கூட்டத்தில் உரம் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் தங்களது விருப்பத்துக்கேற்ப உற்பத்தி செலவை உயர்த்தி கொள்ள அனுமதித்து வருவதையும், உரச்சத்து அடிப்படையில் உர மானியம் வழங்கி வருவதை கைவிட வேண்டும். கடந்தாண்டு ஏப்., 1க்கு முன் கடைபிடித்து வந்த உர விலை கட்டுப்பாட்டு சட்டத்தின்படி, உர மானிய கொள்கையை நடைமுறைப்படுத்தி உர விலையை குறைக்க மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். உர விலை, ஆள் கூலி உயர்வு மற்றும் சாகுபடி செலவினங்கள் அதிகரித்ததற்கு ஏற்றவாறு, தேர்தல் வாக்குறுதிப்படி கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.2,500 வழங்க வேண்டும். பால் உற்பத்தியாளருக்கு பால் கொள்முதல் விலை லிட்டருக்கு ரூ.2 முழுமையாக கிடைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். உர விலையை குறைத்திடவும், மின் விநியோகம் சீர்செய்து முறைப்படுத்திடவும் மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி டிசம்பர் மாதம் போராட்டம் நடத்துவது என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இதில், பொறுப்பாளர்கள் துரைசாமி, ராஜேந்திரன், சுந்தர்ராஜ், பெரியசாமி, ராமதாஸ், மணிகண்டன்,

விவேகானந்தன், செல்லக்கருப்பு, ராஜாமணி, துரைராஜ், படைகாத்து, தங்கவேல் மற்றும் பலர் பங்கேற்றனர்.

## 2,600 மெட்ரிக் டன் யூரியா வருகை

பதிவு செய்த நாள் : நவம்பர் 29,2011,04:40 IST

கருத்தை பதிவு செய்ய

தஞ்சாவூர்: தஞ்சாவூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு இரண்டாயிரத்து 600 மெட்ரிக் டன் இப்கோ யூரியா அடி உரம் 41 ரயில் வேகன்களில் வந்தது. ரோமன் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இப்கோ யூரியா அடி உரம் கப்பல் மூலம் ஆந்திர மாநிலம் கிருஷ்ணாப்பட்டினம் துறைமுகத்துக்கு வந்தது. அங்கிருந்து 41 ரயில்வேகன்கள் மூலம் நேற்று காலை தஞ்சாவூர் ரயில்வே ஸ்டேஷன் வந்தது. இங்கிருந்து தஞ்சாவூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு இணையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. தொடர்ந்து தஞ்சாவூர் மாவட்டம் முழுவதிலும் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு பிரித்து லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. இப்கோ யூரியா உரம் ஒரு மூடையின் விலை ரூபாய் 265.50 காசாகும்.

## தேவையான உரங்கள் கையிருப்பு உள்ளது :தஞ்சை மாவட்ட கலெக்டர் தகவல்

பதிவு செய்த நாள் : நவம்பர் 29,2011,04:39 IST

கருத்தை பதிவு செய்ய

தஞ்சாவூர்: தஞ்சாவூர் கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் பாஸ்கரன் தலைமையில் நடந்தது. நுகர்பொருள் வாணிப கழக முதன்மை மேலாளர் பிச்சை வரவேற்றார். வேளாண் இணை இயக்குனர் பாலசுப்ரமணியன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் (காவிரி) ரவிச்சந்திரன் உட்பட அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர். கலெக்டர் பாஸ்கரன் பேசியதாவது: நடப்பாண்டு குறுவை சாகுபடி நான்காயிரத்து 283 ஹெக்டரில் மேற்கொள்ளப்பட்டு அறுவடை பணி முழுவதுமாக முடிவடைந்துள்ளது. இதில் 25 ஆயிரத்து 569 ஹெக்டேரில் திருந்திய நெல் சாகுபடி முறையில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு அதிகபட்சமாக ஹெக்டேருக்கு ஒன்பதாயிரம் 100 கிலோ மகசூல் பூதலூர் வட்டாரத்தில் கிடைக்க பெற்றுள்ளது. கடந்தாண்டு குறுவை மகசூலை விட இந்தாண்டு கூடுதலாக ஹெக்டேருக்கு 892 கிலோ அதாவது சராசரி மகசூல் ஹெக்டேருக்கு ஆறாயிரத்து 540 கிலோ கிடைத்துள்ளது. சம்பா நடவு பணிக்கு தேவையான நாற்றங்கால் ஐந்தாயிரத்து 461 ஹெக்டேரில் விடப்பட்டு இது வரை

47 ஆயிரத்து 823 ஹெக்டேரில் திருந்திய நெல் சாகுபடி முறையிலும், 44 ஆயிரம் ஹெக்டேரில் சாதாரண முறையிலும் ஆக கூடுதலாக 91 ஆயிரத்து 823 ஹெக்டரிலும் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோல் தாளடியில் ஆயிரத்து 852 ஹெக்டேரில் நாற்று விடப்பட்டு 27 ஆயிரத்து 967 ஹெக்டேரில் நடவு பணி முடிந்துள்ளது. இதில் 16 ஆயிரத்து 197 ஹெக்டேரில் திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு பணி முடிந்துள்ளது. மேற்கண்ட சம்பா, தாளடி பணிக்கு தேவையான ஆயிரத்து 668 மெட்ரிக் டன் விதைகள் வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலமாக விநியோகம் செய்யப்பட்டுள்ளது. டிசம்பர், ஜனவரி மாத விதைப்புக்கு தேவையான உளுந்து, பயறு வகை விதைகள் 267 மெட்ரிக் டன் வேளாண்மை விரிவாக்க மையம் மூலம் விநியோகம் செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்துக்கு தேவையான யூரியா ஆறாயிரத்து 252 மெட்ரிக் டன்னும், டி.ஏ.பி., இரண்டாயிரத்து 760 மெட்ரிக் டன்னும், பொட்டஷ் ஆயிரத்து 55 மெட்ரிக் டன்னும், காம்பளக்ஸ் உரங்கள் மூன்றாயிரத்து 666 மெட்ரிக் டன்னும் தனியார் மற்றும் கூட்டுறவு சங்களில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. மேலும் ஐ.பி.எல்., பொட்டாஷ் ஆயிரத்து 300 மெட்ரிக் டன் மற்றும் எம்.எப்.எல்., யூரியா 800 மெட்ரிக் டன் ரயில் மூலம் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு கலெக்டர் பாஸ்கரன் பேசினார்.

**விவசாயிகள் தன்னிறைவு பெற திட்டம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 29,2011,02:36 IST

கருத்தை பதிவு செய்ய

மதுரை : விவசாயிகள் தன்னிறைவு பெறும் வகையில், தானம் அறக்கட்டளை சார்பில் "வயலக' திட்டம் மூலம், கண்மாய்

ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு மேம்படுத்தப்பட்டு வருகிறது. இது குறித்து, தானம் மக்கள் கல்வி மைய இயக்குனர் சாந்தி, திட்டத் தலைவர் வெங்கடேசன் கூறியதாவது: இந்தியாவில் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, பீகார், ஒரிசாவில் இரண்டரை லட்சம் விவசாயிகளை ஒருங்கிணைத்துள்ளோம். தமிழகத்தில் ஒரு லட்சம் விவசாயிகள் இத்திட்டத்தில் பயன்பெறுகின்றனர். தமிழகத்தில் கண்மாய், குளம், ஏரிகள் 40ஆயிரம் உள்ளன. இதில் 13ஆயிரம் வரை பொதுப்பணித் துறை கட்டுப்பாட்டில் உள்ளன. மீதியுள்ளவை பஞ்., கட்டுப்பாட்டில் உள்ளன. இக்குளம், ஏரி, கண்மாய்களை சீரமைக்கும்

பணியில் ஈடுபட்டுஉள்ளோம். முக்கியமாக சிறு,குறு விவசாயிகளின் மேம்பாட்டிற்காக, கண்மாய், குளங்களில் பயன்பெறும் விவசாயிகளை ஒருங்கிணைத்து வயலக குழுக்களை அமைத்துள்ளோம். ஒரு சில கண்மாயிலிருந்து தொடர்ந்து அடுத்தடுத்த கண்மாய்க்கு தண்ணீர் செல்லும்

வழியிருந்தால், அங்கே முறைப்பாசன பிரச்னை இருக்கும். அத்தகைய விவசாயக் குழுக்களை இணைத்து, கூட்டமைப்பாக்குகிறோம். இவர்களின் பிரச்னைகளை தீர்வு காண்பது, ஆக்கிரமிப்பு இருந்தால் அவற்றை நிரந்தரமாக அகற்றுவது போன்ற பணிகளில் ஈடுபட்டு வருகிறோம். தேனி சின்னமனூர், மதுரை கொட்டாம்பட்டியில் இருந்த கண்மாய் ஆக்கிரமிப்புகளை விவசாயிகளைக் கொண்டு, தொடர்ந்து போராடி மீட்டுள்ளோம். இதற்கென வயலக பணியாளர்களுக்கு 15 நாட்கள் சிறப்பு பயிற்சி அளிக்கிறோம். கண்மாய், ஏரிகளின் வரலாறு, விவசாய ஆதாரம் குறித்த செயல்விளக்கமும், நேரடி பயிற்சியும் அளிப்பதால், பணியாளர்கள் விவசாயிகளிடம் விஷயங்களை சென்று சேர்க்கின்றனர், என்றனர்.

**மானியத்துடன் பவர் டில்லர் கருவி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 29,2011,01:16 IST

கருத்தை பதிவு செய்ய

தூத்துக்குடி : தூத்துக்குடி மாவட்டத்தில் 6 விவசாயிகளுக்கு மானியத்துடன் கூடிய பவர்டில்லர் வழங்கப்பட்டது. இதனை கலெக்டர் ஆஷீஷ்குமார் வழங்கினார். தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நேற்று மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 6 விவசாயிகளுக்கு தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் தொழி அடித்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கு உபயோகமாகக் கூடிய பவர் டில்லரை கலெக்டர் வழங்கினார்.ஒரு பவர் டில்லரின் மதிப்பு ஒரு லட்சத்து 41 ஆயிரத்து 975 ரூபாய். இதில் 45 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. மீதியுள்ள 96 ஆயிரத்து 975 ரூபாய் விவசாயிகள் செலுத்தினால் போதும்.இந்த பவர் டில்லர்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு கலெக்டர் வழங்கினார். வேளாண்மை இணை இயக்குநர் (பொ) ரஞ்சித்சிங் தன்ராஜ், மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.